[1978 பிப்ரவரி 25

Panchayat Union Middle Schools.

* 137 Q—Thiru A. R. DAMODARAN (on behalf of Thiru K S. GANAPATHI): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any Government Order providing that, in the matter of appointment as B. T. Headmasters in Panchayat Union Middle Schools, preference be given to the Trained Graduate Teachers working as Secondary Grade teachers in such schools, as against B. T. Degree holders from outside;

(b) if so, whether this principle has not been observed by the Commissioner of Andanallur Panchayat Union, Tiruchirappalli district, in certain appointments made on 20th June 1975; and

(c) if so, the reasons therefor?

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள்.

திரு. எ. ஆர். தாமோதரன் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் (Middle Schools) பி.டி. தலைமையாசிரியர்கள் நியமனம் விஷயத்தில், வெளியிலிருந்து வரும் பி.டி. பட்டதாரிகளுக்குப் பதிலாக, அப்பள்ளிகளிலேயே இடைநிலை Secondary Grade) ஆசிரியர்களாகப் பணியாற்றும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் அரசு ஆணை ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஆண்டநல்லூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், 20—6—1975 அன்று செய்யப்பட்ட சில நியமனங்கள் விஷயத்தில். இந்த விதிமுறையைப் பின்பற்றவில்லையா?

(உ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(இ) பணிக்குழு தேர்வு நடத்திய 28-4-1975 அன்று பி.டி. தேர்ச்சி பெற்ற பட்டதாரி எவரும் இவ்வொன்றியத்தில் முதுநிலை ஆசிரியராகப் பணி புரியவில்லை.

(உ) இவ்வினாவிற்கு இடமில்லை.

1978 பிப்ரவரி 25]

திரு. பி. ஆர். தாமஸ் : பஞ்சாயத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் பி.டி. பட்டம் பெற்றவர்களை தலைமை ஆசிரியர்களாக நியமனம் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதுபற்றித் தனிக் கேள்வி போடவும்.

திரு. க. அறிவழகன் : மூலக் கேள்வியினுடைய முன் பகுதி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் உள்ள இடைநிலை ஆசிரியர்களில் பி.டி. பட்டம் பெற்றவர்களுக்குத் தலைமையாசிரியர் பதவி தருவதில் முன்னுரிமை அளிக்கப் படுமா என்பதுதான். அப்படி முன்னுரிமை அளிப்பதிலே அரசு உறுதியாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அப்படி முன்னுரிமை அளிக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய உறுதியான கொள்கை.

State Backward Classes Welfare Advisory Board.

* 138 Q—Thiru ARCOT N. VEERASAMI (on behalf of Thiru V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to reorganise the State Backward Classes Welfare Advisory Board; and

(b) if so, whether the Government will take necessary action to include the representatives of the people in the new Advisory Board?

மாநில பிற்பட்டோர் நல ஆலோசனைக் குழு.

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநில பிற்பட்டோர் நல ஆலோசனைக் குழுவைத் திருத்தி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், புதிய ஆலோசனைக் குழுவில் மக்கள் பிரதிநிதிகள் இடம்பெற அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) ஆம்.

(இ) இக்குழு திருத்தி அமைக்கப்படும்பொழுது அதில் மக்கள் பிரதி நிதிகள் சிலரும் இடம்பெறுவர்.